**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.02.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : 27.02.2020

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்புகள் 10 தவணையில் வழங்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு நாடகம் தெரிவிக்க மேற்கொள்ளும் பணிக்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | விநியோகஸ்தர் பெயர் | செலவினம் |
|---|---|---|
| 1 | சீனிவாசா ஒலி & ஒளி அமைப்பகம் | ரூ. 44100/– |
| 2 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா சவுண்ட் சிஸ்டம் | ரூ. 49980/– |
| 3 | ராஜேஸ்வரி ஒலிபெருக்கி நிலையம் | ரூ. 58800/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவாக பெறப்பட்ட சீனிவாசா ஒலி & ஒளி அமைப்பகத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(352/2020/இ2)

**தீர்மானம் எண். 744**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் தொழில்வரி, வீட்டுவரி, தண்ணீர்வரி, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் எண்ணற்ற சேவைகள் இணையதளம் மூலம் செய்து வருகிறது. தற்போது நகராட்சியில் சேவைகள் அதிகமாக செயல்பட மேலும் 3 wifi modem உடன் இணைப்புகள் தேவைப்படுகிறது. அதற்குண்டான உத்தேச செலவினத் தொகை ரூ. 15000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(241/15/அ5)

**தீர்மானம் எண். 745**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சியில் தொழில்வரி, வீட்டுவரி, தண்ணீர் வரி, பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் எண்ணற்ற சேவைகள் இணையதளம் மூலம் செய்து வருகிறது. தற்போது

தொலைபேசி இணைப்புகள் பழுதடைந்து உபயோகிக்க முடியாததால் சேவைகள் அனைத்தும் நிலுவையில் உள்ளது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் உடனடியாக **3** தொலைபேசி இணைப்புகள் கேபிள் மூலம் wifi modem உடன் இணைப்பு பெற **27.01.2020** உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **பணியின் பெயர்** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் தொகை விவரம்** | | |
|---|---|---|---|
| | **K.K. Communication Sivan Kovil Street, Rasipuram.** | **Rainbow Internet Tele Service Private Limited. PSN Complex, Rasipuram.** | **ARS Internet Tele Service Private Limited, 29/21, Kamaraj Nagar, Rasipuram.** |
| Installation fiber optical internet deposit and wifi modem | ரூ. **4000/–** | ரூ. **6000/–** | ரூ. **7000/–** |

பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள K.K. Communication, Rasipuram என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(241/15/அ5)

**தீர்மானம் எண். 746**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தற்சமயம் **6** LCV வாகனம் இயங்கி வருகிறது. **6** LCV வாகனங்களுக்கு சர்வீஸ் செய்ய வேண்டியிருப்பதால், அதற்கான செலவினத் தொகை ரூ. **17007/–**ஐ LRN Motors Private Limited, Salem என்ற நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருப்பதால் ரூ. **17007/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** அவசர அவசியம் கருதி, நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், அதற்கான செலவினத் தொகை ரூ. **17007/–** வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**3)** மேற்காண் பணிகளை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(10/2020/எச்1)

**தீர்மானம் எண். 747**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சிப் பொறியாளர் அறைக்கு **850** w UPS அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **20000/–** (ரூபாய் இருபதாயிரம்) பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 20000/– செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(306/20/இ1)

**தீர்மானம் எண். 748**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் 14–ஆவது நிதிக்குழு மான்யம் 2019–20–இன்கீழ் நான்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள தினமணி நாளேட்டில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான கட்டணம் ரூ. 2782/– Bright Advertising, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(497/19/இ1)

**தீர்மானம் எண். 749**

அனுமதிக்கப்பட்டது.

(7) இந்நகராட்சியின் ஈப்பு எண். TN 28 Q 8402–இல் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்தல் பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1) | ஸ்ரீ தனலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், நெசவாளர் காலனி, இராசிபுரம். | ரூ. 8600/– |
| 2) | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மோட்டார்ஸ், குமாரசாமி தெரு, இராசிபுரம். | ரூ. 8950/– |
| 3) | ஸ்ரீ சாமி சரவணா கார் டிங்கரிங் ஒர்க்ஸ், காட்டூர், இராசிபுரம். | ரூ. 9100/– |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் ஸ்ரீ தனலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், இராசிபுரம் நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதால், அவ்விலைப்புள்ளியை ஏற்க மன்றத்திடம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(330/2020/இ2)

**தீர்மானம் எண். 750**

அனுமதிக்கப்பட்டது.

( 8 )    இராசிபுரம் நகராட்சி அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவு கணினி மற்றும் கணினி உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 180000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியும், தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரமும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 180000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அங்கீகரிக்கலாம்.

(452/20/இ1)

**தீர்மானம் எண். 751**

அனுமதிக்கப்பட்டது.

( 9 )    இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வ.உ.சி. நகர் 9 LL மேல்நிலைத் தொட்டி மற்றும் 10 LL பழைய பேருந்து நிலைய மேல்நிலைத் தொட்டி செக் நட் ராடு மறை போடும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம். | ரூ. 1,30,000/– |
| 2 | திரு ஆர். மாணிக்கம், ஒப்பந்ததாரர், இராசிபுரம். | ரூ. 1,35,000/ |
| 3 | திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர், இராசிபுரம். | ரூ. 1,37,000/ |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரரின் குறைந்த விலைப்புள்ளி ஏற்கப்பட்டு 1920–ஆம் வருடத்திய நகராட்சி சட்ட விதி 15–இன் கீழ் அவசர அவசியம் கருதி முடிக்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(110/20/இ2)

**தீர்மானம் எண். 752**

அனுமதிக்கப்பட்டது.

( 10 )    இராசிபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள ஜெராக்ஸ் இயந்திரம் SHARP copier Drum Kit மாற்றம் செய்யவும் இரண்டு டோனர்கள் வாங்கவும் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Spyder Technology, Salem - Rs. 49,300/-
2) Venus Tech, Salem - Rs. 51,000/-
3) Chandra He. Tech, Erode - Rs. 52,000/-

அலுவலக பணியின் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Spyder Technology, Salem அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அலுவலகப் பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(452/20/இ1)

**தீர்மானம் எண். 753**

அனுமதிக்கப்பட்டது.

(11) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 6, 9, 12, 18, 19 மற்றும் 21 ஆகியப் பகுதிகளில் TUFIR சாலை அமைக்கும் பணியில் மழைநீர் வடிகால் அமைக்கும் போது சாக்கடையின் நடுவில் பைப் லைன் வருவதினால் மேற்குறிப்பிட்ட வார்டு எண்களுக்கு உப்புநீர் வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேற்காணும் பகுதிகளுக்கு புதியதாக உப்புநீர் குழாய் அமைத்துக் கொடுக்க உத்தேச செலவினம் ரூ. 250000/– என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(396/2020/இ2)

**தீர்மானம் எண். 754**

அனுமதிக்கப்பட்டது.

(12) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட இராமசாமி தெரு எண். 1–இல் இருக்கும் கழிப்பிடம் மற்றும் பாத்ரூம் பராமரிப்பு பணியினை அம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கீழ்காணும் நிபந்தனைகளுடன் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனை**

1) இராமசாமி தெருவிலுள்ள கழிப்பிடம் மற்றும் பாத்ரூம் பராமரிப்பு நல்ல முறையிலும், சுத்தமாகவும் பராமரிக்க வேண்டும்.
2) மேற்படி கழிப்பிடத்தை பராமரிக்கும் சமயத்தில் சமூக விரோத செயல்கள் எதுவும் நடக்கக் கூடாது.
3) மேற்படி கழிப்பிடத்திற்கு மின்சாரக் கட்டணம் குறிப்பிட்ட காலத்திற்குள் மாதந்தோறும் மின்சார வாரியத்தில் செலுத்தி ரசீது வைத்திருக்க வேண்டும். மேலும், மின்மோட்டார்களில் பழுது ஏற்பட்டால், சுய உதவிக் குழுவில் சொந்த செலவில் சரி செய்து கொள்ள வேண்டும்.
4) மேற்படி கழிப்பிடத்தை தொடர்ந்து நடத்தவோ அல்லது இரத்து செய்யவோ நகராட்சி ஆணையாளருக்கு முழு அதிகாரம் உள்ளது. ஆணையாளரின் முடிவே இறுதியானது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2767/19/எச்1)

**தீர்மானம் எண். 755**

அனுமதிக்கப்பட்டது.

(13) இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் திரு எம். பழனிசாமி மற்றும் 12 துப்புரவு பணியாளர்கள் தங்களை பணிவரன்முறைப்படுத்தக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் நகராட்சி மூலம் மேல்முறையீடு செய்யப்பட்டது. நீதிப்பேராணை எண். WASR No. 70171 of 2014 மற்றும் M.P.No. 1 of 2014–இன் தீர்ப்பு 18.07.2019–இல் வெளியிடப்பட்டது. ஆணை நகல் 06.12.2019 நகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டது. மேற்படி தீர்ப்பில் நகராட்சி தொடர்ந்த மேல்முறையீடு மனுவை தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, துப்புரவு பணியாளர்கள் திரு எம். பழனிசாமி மற்றும் 12 துப்புரவு பணியாளர்களுக்கு எதிராக மீண்டும் மேல்முறையீடு மனு (Restoration Petition) உயர்நீதி மன்றத்தில் தொடர கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு S.V. துரைசோலைமலை அவர்கள் மூலம் மேல்முறையீடு செய்யவும், அதற்கான கட்டணம் ரூ. 30000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1107/13/எச்1)

**தீர்மானம் எண். 756**

அனுமதிக்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து இறந்த திரு ராஜேந்திரன் அவர்கள் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்த காலத்தினை ஓய்வூதியத்திற்கு எடுத்துக் கொள்ள கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் அன்னாரது மனைவி திருமதி ராணி தொடர்ந்த வழக்கு நீதிப்பேராணை எண். 24234 of 2013–இன் தீர்ப்பு 12.12.2019 அன்று பெறப்பட்டது. தீர்ப்பு நகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக உள்ளதால் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டியுள்ளது. அதற்கு உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு P. ஸ்ரீனிவாசன் என்பவர் மூலம் உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யவும், மேற்படி வழக்கறிஞருக்கு உயர்நீதி மன்றத்தில் வாதாட கட்டணம் ரூ. 22000/– வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1341/19/எச்1)

**தீர்மானம் எண். 757**

அனுமதிக்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள 27 வார்டு பகுதிகளிலுள்ள அனைத்து வீதிகளையும் 40 துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு M/s. Relyon Facility Services Private Limited, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் துப்புரவு பணிகளை 01.03.2019 முதல் 29.02.2020 வரையில் மேற்கொள்ளப்பட்டது. தற்போது ஒரு வருட கால ஒப்பந்தம் 29.02.2020 அன்று முடிவடைந்துவிட்டதால், மீண்டும் தனியார் மூலம் 40 துப்புரவுப் பணியாளர்கள் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆணை மூ.மு.எண். 28369/ஜே3 நாள் 04.12.2018–இல் 120 துப்புரவுப் பணியாளர்களை நியமித்துக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி, தற்சமயம் 80 ஒப்பந்த துப்புரவுப் பணியாளர்கள் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, மீதமுள்ள 40 துப்புரவுப் பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி நியமித்துக்

கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 78/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனியார் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி SUC நிதியிலிருந்தும், நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்தும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1475/18/எச்1)

**தீர்மானம் எண். 758**

அனுமதிக்கப்பட்டது.

(16) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்கெட் பகுதியிலுள்ள கடைகளுக்கு 9 ஆண்டுகள் முடிவுற்றபடியால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கண்காணிப்பு குழுவின் மூலமாக 2016–17–ஆம் ஆண்டுகளில் 01.07.2016 முதல் வாடகைத் தொகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதை எதிர்த்து நீதிப் பேராணை எண். 16718 முதல் 16734 மற்றும் 16736 முதல் 16750/2017 வரை வழக்குகள் குத்தகைதாரர்களால் சென்னை, உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் மேற்காணும் வழக்குகளுக்கு நகராட்சிக்கு சாதகமாக கடந்த 07.12.2017 அன்று தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. மேற்காணும் வழக்கு குத்தகைதாரர் 28.09.2019–இல் மேல் முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டதில் வழக்கு எண். W.A.S.R.No. 14622, 14602, 14606, 14594, 14598, 14614, 14630, 14618, 14626, 14638, 14642, 14610 of 2019 ஆகிய வழக்குகளுக்கு 17.02.2020 அன்று விசாரணை நடைபெற்றதில் மேற்காணும் வழக்குகளுக்கு 17.02.2020 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு, நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணத் தொகை ரூ. 90000/– வழங்கவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3097/17/அ2)

**தீர்மானம் எண். 759**

அனுமதிக்கப்பட்டது.

(17) தமிழக அரசின் சாதனைகள் தொடர்பாக மாலை மலர் நாளிதழில் இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் விவரம் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 9900/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 9900/– விளம்பரக் கட்டணம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(497/19/இ1)

**தீர்மானம் எண். 760**

அனுமதிக்கப்பட்டது.

(18) இந்நகராட்சியில் பொருத்துநர் நிலை 2–ஆக பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு எஸ். ஜெகதீசன் என்பவரால் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை எண். 10455/2008–இல் நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு வரப்பெற்றது.

மேற்படி வழக்கினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய திரு P. ஸ்ரீனிவாசன், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞரிடம் வக்காலத்து வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கினை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வழக்கு கட்டணமாக ரூ. 22000/– வழங்க கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கு கட்டணம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பொது நிதியிலிருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1812/08/சி1)

**தீர்மானம் எண். 761**

அனுமதிக்கப்பட்டது.

(19) சென்னை உயர்நீதி மன்ற வழக்கு நீதிப்பேராணை எண். 13264/2006 மற்றும் 33415/2006–இன் வழக்கு திரு பி. சுப்ரமணியம், ஓய்வு என்பவரால் தொடரப்பட்டது. நகராட்சிக்கு எதிராக தீர்ப்பு வரப்பெற்றது.

மேல்முறையீடு செய்ய திரு P. ஸ்ரீனிவாசன், சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்களிடம் வக்காலத்து அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் வழக்கு கட்டணமாக ரூ. 22000/– வழங்க கோரியுள்ளார்.

எனவே, மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணமாக ரூ. 22000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(7091/11/சி1)

**தீர்மானம் எண். 762**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.